## இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021(2024)

*பரீட்சை ஆணையாளார் நாயகத்தினால் 2024.03.17 ஆந் திகதி நடத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்காக தகைமைபெற்ற 408 விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் இத்தால் வெளியிடப்பட்டிருப்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களின்பால் விசேட கவனம் செலுத்தவும்.*

1. இப் பரீட்சைக்குத் தோற்றி ஒவ்வொரு பாடத்திற்கும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் மற்றும் பரீட்சையின் முழுப் புள்ளிகளின் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற நானூற்று நான்கு (404) விண்ணப்பதாரிகள் மற்றும் அங்கவீன புனர்வாழ்வு அடிப்படையின் கீழ் தகைமை பெற்ற நான்கு (04) விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் திறமை ஒழுங்கு அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

2. நேர்முகப் பரீட்சையில் எதிர்பார்க்கப்படும் அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

3. அங்கவீன புனர்வாழ்வு அடிப்படையின் கீழ் தகைமை பெற்ற விண்ணப்பதாரிகள் சாதாரண நேர்முகப் பரீட்சையில் தேவைப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருந்தால் மட்டும் வைத்திய பரிசோதனைச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டு அச் சபையின் பரிந்துரைக்கு அமைவாக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III க்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

4. அதன்படி இப் பெறுபேற்று ஆவணத்தில் பெயர் வெளியிடப்பட்டிருத்தல் மாத்திரம் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு 3 தரம் III இன் நியமனம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கான தகைமையாக அமைய மாட்டாதென்பதை கவனத்தில் கொள்ளவும்.

5. இவ் அலுவலர்க்கான நேர்முகப் பரீட்சை **2024.10.05** மற்றும் **06** ஆந் திகதிகளில் இவ் அமைச்சில் நடத்தப்படுவதுடன் அதற்கான நேர் அட்டவணை கீழே வெளியிடப்பட்டிருப்பதுடன் குறித்த திகதியில் குறித்த நேரத்துக்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் படி அறியத்தரப்படுகின்றது

6. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதம் ஒவ்வெறு விண்ணப்பதாரிக்கும் தபாலில் அனுப்பிவைக்கப்படும். நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்ளும் போது பின்வரும் எழுத்தாவணங்களை உடன் கொண்டு வர வேண்டும்.

   I. பிறப்புச் சான்றிதல்

   II. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 7.0 (உ) மற்றும் (ஊ) இல் குறிப்பிடப்பட்டிருக்கும் கல்வி மற்றும் தொழிற்தகைமைகளில் நீங்கள் தகைமை பெற்றுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதல்கள்